*முக்கிய வார்த்தைகள்: நம்பிக்கை/நம்பிக்கை திட்டமிடல் முயற்சி*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**12 ஜுலை 2024 / 06 முஹர்ரம் 1445 ஹிஜிரி**

# துன்பத்தில் நம்பிக்கை

**الحَمْدُ لِلَّهِ الَّذِي جَعَلَ فِي اخْتِلَافِ اللَّيْلِ وَالنَّهَارِ لَآيَاتٍ لِأُوْلِي الأَلْبَابِ، وَجَعَلَ المُحَرَّمَ مِنَ الأَشْهُرِ الحُرُمِ تَذْكِيرًا لِحُرْمَتِهِ لِمَنْ تَابَ إِلَيْهِ وَأَنَابَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ الكَرِيمُ الوَهَّابُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبدُهُ وَرَسُولُهُ الَّذِي اصْطَفَاهُ وَأَنزَلَ عَلَيْهِ الكِتَابَ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ صَلَاةً نَنَالُ بِهَا شَفَاعَتَهُ يَوْمَ الحَشْرِ وَالحِسَابِ. أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا المُسْلِمُونَ، أُوصِيكُم وَنَفْسِي بِتَقْوَى اللهِ عَزَّ وَجَلَّ، فَقَد فَازَ المُتَّقُونَ.**

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" [பக்தியை] அதிகரித்துக் கொள்ள தொடர்ந்து முயற்சிப்போமாக! எல்லாம் வல்ல அல்லாஹ், இப்புதிய ஹிஜிரி ஆண்டில் நமது உள்ளங்களைப் பரிசுத்தமாக்குவானாக! அவன் மீதான நமது நம்பிக்கையை உறுதியாக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

கடந்த இரவில் நம்மில் சிலர், திருக்குர்ஆனின் "யாஸீன்" எனும் அத்தியாயத்தை ஓதியிருக்கலாம்; அந்த அத்தியாயத்தின் பின்வரும் 9-வது வசனத்தையும் ஓதியிருக்கலாம்:

وَجَعَلْنَا مِنۢ بَيْنِ أَيْدِيهِمْ سَدًّا وَمِنْ خَلْفِهِمْ سَدًّا فَأَغْشَيْنَـٰهُمْ فَهُمْ لَا يُبْصِرُونَ ﴿٩﴾

பொருள்: இன்னும் நாம் அவர்களுக்கு முன்னே ஒரு தடுப்பையும் அவர்களுக்குப் பின்னே ஒரு தடுப்பையும் ஏற்படுத்தியுள்ளோம்; [இவ்வாறாக] அவர்களை நாம் மூடி விட்டோம் - ஆகையால் அவர்கள் பார்க்க முடியாது.

இந்த வசனத்திலிருந்து நாம் பெற வேண்டிய பாடம் என்ன என்பதையும், இவ்வசனம் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணம் சம்பந்தப்பட்டது என்பதையும் நாம் அறிய வேண்டும்.

மேற்கண்ட வசனத்தில் காணப்படும் சம்பவமானது, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மக்காவில் தனது வீட்டிலிருந்த போது, குறைஷிகுல மக்கள் அவர்களைக் கொல்வதற்குச் செய்த முயற்சியைச் சுட்டிக் காட்டுகிறது. குரைஷிகள் ஏன் அந்த அளவிற்கு அடைந்தார்கள், வல்லமைமிக்க ஏக இறைவனாகிய அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டுமென்ற இஸ்லாத்தின் தூதை அம்மக்களுக்கு அவர்கள் கூறியதாகும். இஸ்லாத்தின் இந்த தூதரை மக்கள் நிராகரித்தனர்.

எனினும், அல்லாஹ்வின் உதவியாலும், நமது இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கவனமாகத் திட்டுமிட்டுச் செயல்பட்டதன் காரணமாகவும் இறைத்தூதர் [ஸல்] அவர்கள் குறைஷியரின் சதித் திட்டத்திலிருந்து தப்பித்தார்கள். இம்முக்கிய நிகழ்ச்சியைத் தான், தற்போது ஓதப்பட்ட திருக்குர்ஆனின் "யாஸீன்" எனும் அத்தியாயத்தின் 9-வது வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**எனது சக முஸ்லிம்களே!**

நமது இறைத்தூதர்[ஸல்] அவர்களும் அவர்களின் தோழர்களும் மக்காவிலிருந்து மதீனாவுக்குச் செய்த "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணத்தின் வரலாற்றை நாம் அனைவரும் அறிவோம் என நான் உறுதியாக நம்புகிறேன். குறைஷிகுல மக்களால், அவர்கள் துன்புறுத்தப்பட்டதாலும் அடக்குமுறை செய்யப்பட்டதாலும் அப்பயணத்தை அவர்கள் மேற்கொண்டார்கள். இன்று, நமது இறைத்தூதர்[ஸல்] அவர்களின் அந்த தியாகப் பயணத்தைப் பற்றி சற்று வித்தியாசமாகச் சிந்திக்குமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். இன்றைய பிரசங்கத்தின் மூலம் நாம் மூன்று முக்கிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**முதலாவது, திட்டமிடுதலாகும்.** இறைத்தூதர்[ஸல்] அவர்கள் தனது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அல்லாஹ்வின் உதவியின் மீது நம்பிக்கை கொள்வதற்கு முன்பாக, கவனமாகத் திட்டமிட்டார்கள்; அதற்காக பல முயற்சிகளைச் செய்தார்கள். உதாரணமாக, அவர்கள் தனது வீட்டை விட்டு புறப்படுவதற்கு முன்பாக, செய்யிதினா அலீ பின் அபீதாலிப் [ரலி] அவர்களைத் தனது விரிப்பில் படுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள். விரோதிகளைக் குழப்பதில் ஆழ்த்துவதற்காக அவ்வாறு செய்தார்கள். அதற்குப் பின்பு தான், தனது திட்டம் வெற்றியைத் தரும் என்பதில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தார்கள். சகோதர, சகோதரிகளே! உன்னிப்பாகத் திட்டமிடுதலையும் முயற்சியையும் செய்யாமல் வெறும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொள்வதில் பொருள் இல்லை. இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கூறுகையில்: "உனக்குப் பயன் தரும் விஷயங்களில் முயற்சி செய்வாயாக! பின்பு அல்லாஹ்வின் உதவியை நாடுவாயாக! நான் ஆதரவற்றவனாக ஆகி விட்டேன் என நினைக்க வேண்டாம்" எனக் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

**இரண்டாவதாக, மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற நாட வேண்டும்; அதே சமயம், மற்றவர்களுக்கு உதவிக் கரம் நீட்டவும் வேண்டும்.** எனது

சகோதர, சகோதரிகளே! அல்லாஹ்வின் இப்பூமியில் நாம் தனித்து வாழ முடியாது. நாம் மனிதர்கள் எனும் ரீதியில், பிறருக்கு உதவி செய்வது, பிறரின் உதவியை நாடுவது ஆகியவற்றின் பால் அவசியமானவர்களாக இருக்கின்றோம். செய்யிதினா அலி [ரலி] அவர்கள் இறைத்தூதர்[ஸல்] அவர்களுக்கு உதவியது போல், மக்காவிலிருந்து மதீனா நகருக்குச் செய்யப்பட்ட "ஹிஜ்ரத்" பயணத்தில் செய்யிதினா அபூபக்ர் அஸ்-ஸித்தீக் [ரலி] அவர்கள் இறைத்தூதர்[ஸல்] அவர்களுடன் இருந்து உதவினார்கள். "தவ்ர்" எனும் குகையில் இறைத்தூதர்[ஸல்] அவர்களுடன் ஒழிந்திருந்தார்கள். குறைஷியர்கள் அக்குகையை அணுகி, அவர்கள் இருவரையும் கண்டு கொள்ளும் நிலையிலிருந்த போது, செய்யிதினா அபூபக்ர் [ரலி] அவர்கள் மிகவும் கவலைப்பட்டார்கள். அப்போது இறைத்தூதர்[ஸல்] அவர்கள், அபூபக்ர் [ரலி] அவர்களுக்கு உணர்வுப்பூர்வமாக உதவினார்கள். சில வார்த்தைகளைக் கூறி அவர்களை அமைதிப்படுத்தினார்கள். அவ்வார்த்தைகள் திருக்குர்ஆனின் "அத்-தவ்பா" எனும் அத்தியாயத்தின் 40-வது வசனத்தில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது:

لَا تَحْزَنْ إِنَّ ٱللَّهَ مَعَنَا ۖ

பொருள்: "கவலைப்படாதீர்; நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்".

சுப்ஹானல்லாஹ்! [அல்லாஹ் பரிசுத்தமானவன்; மேன்மையானவன்]. நமது இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் நம்பிக்கை இவ்வாறுதான் உறுதியாக இருந்தது. எதிரிகளைச் சந்தித்த போதும், தான் கொல்லப்படும் நிலையிலிருந்த போதும் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் அமைதியாக இருந்தார்கள். தேவையான முயற்சிகளைச் செய்த பின்பு அல்லாஹ்வின் உதவி கிடைக்கும் என்பதில் நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் நாம் சிந்திக்க வேண்டும்; பல பாடங்களைப் பெற வேண்டும். நாம் சோதிக்கப்படும் காலங்களில் அல்லாஹ்வின் மீதான நமது

நம்பிக்கை எந்த அளவு இருக்கின்றது? நமது ஓரிறை நம்பிக்கையானது, தொடர்ந்து நாம் முயற்சி செய்வதற்கும் அல்லாஹ்வின் உதவியில் நம்பிக்கை கொள்வதற்கும் நம்மை ஆர்வமூட்டுவதாக உள்ளதா? அல்லது நாம் நிராசையாகி, நமது முயற்சிகளைக் கைவிட்டு விடுகிறோமா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

**எனது சகோதர, சகோதரிகளே!**

**இறுதியான விஷயம், அல்லாஹ் நமக்கு ஏற்படுத்தியுள்ள விதியிலும் அவனது உதவி நமக்குக் கிடைக்கும் என்பதிலும் நம்பிக்கைக் கொள்வதாகும்.**

அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, மிகச் சிறப்பாகத் திட்டமிடுபவனாக இருக்கின்றான். தனது அடியார்களுக்கு எது நல்லது என்பதை அல்லாஹ் மட்டுமே நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். முயற்சிகளைச் செய்வதும் நம்மை நாம் முன்னேற்றிக் கொள்வதும் நமது கடமையாகும். முயற்சி செய்வது, மற்றும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள விதியில் நம்பிக்கைக் கொள்வது ஆகியவற்றில் கவனம் செலுத்திச் செயல்பட்டால், வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ளும் காலங்களில் நாம் அமைதியானவர்களாக இருக்க முடியும். அல்லாஹ், திருக்குர்ஆனின் "அத்-த:ஃகாபுன்" எனும் அத்தியாயத்தின் 11-வது வசனத்தில் கூறுகிறான்:

مَآ أَصَابَ مِن مُّصِيبَةٍ إِلَّا بِإِذۡنِ ٱللَّهِۗ وَمَن يُؤۡمِنۢ بِٱللَّهِ يَهۡدِ قَلۡبَهُۥۚ وَٱللَّهُ بِكُلِّ شَيۡءٍ عَلِيمٞ ١١

பொருள்: அல்லாஹ்வின் அனுமதியின்றி எவ்வித ஆபத்தும் ஏற்படுவதில்லை. எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ, அவருடைய இருதயத்தை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துகிறான் - அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிந்தவன்.

நமது இறைத்தூதர்[ஸல்] மற்றும் அவர்களின் தோழர்கள் செய்த "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணத்திலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளும்

ஆற்றலை நாம் பெறுவோமாக! அல்லாஹ்வின் மீது தொடர்ந்து நாம் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வோமாக! அவனிடமே நம்மை எப்போதும் ஒப்படைப்போமாக!

யா அல்லாஹ்! நீ தான், உள்ளங்களை மாற்றக் கூடியவனாக இருக்கின்றாய்; எங்கள் உள்ளங்களில் காணப்படும் "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையை உறுதியாக்குவாயாக! யா ஹாதி! யா ராஷித்! உனது மார்க்கத்தின் மீது நிலைத்து நிற்பதற்கான வழியை எங்களுக்குக் காண்பிப்பாயாக! யா கவிய்யு! யா மதீன்! அனைத்து சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலை எங்களுக்கு வழங்குவாயாக! யா ஹகீம்! யா வதூத்! அமைதியாக வாழ்வதற்கும் உனது படைப்புகள் அனைத்தின் மீதும் அன்பு கொள்வதற்குமான மதிநுட்பத்தை எங்களுக்கு வழங்குவாயாக! பணிவுடனும் எங்கள் உள்ளங்களில் நிரப்பமான வருத்தத்துடனும் எங்களின் பாவங்களுக்கான மன்னிப்பை உன்னிடம் கேட்கின்றோம்; கடல் நுரைகளைப் போன்று காணப்படும் எங்களின் எண்ணற்ற பாவங்களை மன்னிப்பாயாக! எங்களின் பிரார்த்தனைகள் ஏற்கப்படாமலிருப்பதற்கு அவை காரணமாக அமைந்து விடாமலிருக்க உதவுவாயாக! தனது பலஹீனமான அடியார்களின் அழுகைகளை கேட்கின்ற இறைவா! எங்களின் பாவங்களை மன்னிப்பாயாக! ஆமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

<u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالْأَمْنَ وَالْأَمَانَ لِلْعَالَمِ أَجْمَع يَا لَطِيْف. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.